# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.5034/F/2024**

திரு அ. கதிர்வேலு .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
விருத்தாசலம் - 606 001. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 27.03.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.05.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 25.10.2024 |

****

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு அ. கதிர்வேலு என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக எஸ். மீனாட்சி சுந்தரம், வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம், விருத்தாசலம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், விருத்தாசலம் உதவி இயக்குநரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கடந்த 2011-2012-ஆம் ஆண்டில் நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் ஏற்பட்ட நிதியிழப்பு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரங்களை மொத்தம் 2 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் புகார் மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கடந்த 2011-2012-ஆம் ஆண்டில் நல்லூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் ஏற்பட்ட நிதியிழப்பு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், நாளதுவரையிலும் இது குறித்து தகவல்கள் ஏதும் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரும் தகவல்கள் நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்தவை என்பதால் அவர் கோரிய தகவல்களை வழங்க இயலவில்லை எனத் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் இல்லாதபட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ் மனுதாரரின் மனுவினை சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கவேண்டும் பொதுத் தகவல் அலுவலர் அவ்வாறு செய்யத் தவறியுள்ளார். எனவே, மனுதாரரின் மனுவில் கோரும் தகவல்களை சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

- ***மேற்படி, மனுதாரரின் 27.03.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தங்கள் அலுவலகத்தில் இல்லாதபட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(3)-ன்கீழ் மனுதாரரின் மனுவினை மாற்றம் செய்யாமல் மனுதாரரை அலைகழித்த காரணத்தினால், விருத்தாசலம், உதவி இயக்குநர் (ஊ) அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர் / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திரு S.A. சுந்தரம் என்பவரின்மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/-***

*(ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பிவைக்குமாறு விருத்தாசலம், உதவி இயக்குநர் (ஊ) அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர் / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரான திரு S.A. சுந்தரம் என்பவருக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.5034/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பாளர்,
உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகம்,
விருத்தாசலம் - 606 001.

**<u>வழக்கு எண்.CP.5034/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு அ. கதிர்வேலு,
சந்தோஷ் மண்டபம் அருகில்,
வேப்பூர் (ம) அஞ்சல்,
கடலூர் மாவட்டம் - 606 304.

Copy to: File
SNPS / 04.04.2025